**தலைப்பு 199 - சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுடன் இணங்கியிருக்காமை.

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாட்டை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய பெறுமதிக்கும் காசேட்டின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்த்து வைக்கப்பட வேண்டிய பெறுமதிக்குமிடையே வித்தியாசம் காணப்படுவதற்கு கட்டு நிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த இரண்டு மீதிகளுக்கிடையே ரூபா 873,980 தேறிய வித்தியாசம் காணப்படுகின்றமைக்கு கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்படவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டு நிதி செம்மையாக்கல் கணக்கு தனியாக தயாரிக்கப்படாததுடன் தீர்த்து வைத்தல்களைச் செம்மையாக்குதல் சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் இடம்பெறுகின்றது. |

### 1.6.2 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

இது சம்பந்தமான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான ரூபா 264,944 மொத்தப் பெறுமதியான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2018 திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்நிகழ்ச்சித் திட்டம் 16 வார இறுதி நாட்களில் நடாத்தப்படுகின்றது.<br><br>அக் கற்கை நெறியை 2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்வதற்கு செயல் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அந்த நிகழ்ச்சித்திட்டம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 16 நாட்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டதனால் அக்கொடுப்பனவு 2019 ஆம் ஆண்டிற்குரியதாகும். |
| (ஆ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழ் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்று திறைசேரியினால் ஒவ்வொரு தலைப்புக்குமாக வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்க வேண்டிய போதிலும், குறிப்பு இலக்கம் (iii) இல் தரப்பட்டுள்ள 13 செலவு விடயங்களின் ரூபா 2,885,673 தொகையான பொறுப்புக்கள் திறைசேரியினால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான திறைசேரி கணனி அச்சுப் பிரதியின் மூலம் காட்டப்பட்டுள்ளதானது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி ஏற்பாடு காணப்பட்டிருந்தும் கட்டுநிதி கிடைக்காததன் காரணமாக ஏற்பட்டுள்ள கடப்பாடுகளும் பொறுப்புக்களுமாக இருந்ததனால் அவ்வாறான சுற்றறிக்கைகளுக்கு முரணாக இடம் பெற்றிருக்கவில்லை. |

### 1.6.3 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காலாவதியான வைப்புக்களை மிக விரைவாக மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் ஒரு ஆண்டிற்கு மேல் காலாவதியான ரூபா 6,657,705 தொகையான வைப்பு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மீளச் செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திருந்தும் போதியளவு கட்டுநிதி கிடைக்காததனால் தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதியாக ரூபா 12,602,306 காட்டப்பட்டிருந்தும் ACA 6 படிவத்தின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 106,634,548 ஆகும். | உரிய செம்மையாக்கல்களை முறையாக மேற்கொண்டு ஆரம்ப மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி கணக்கீடு செய்தல் வேண்டும். | 2018 இல் ஒரு புதிய அமைச்சாக தோற்றுவிக்கப்பட்டதனாலும் அதற்கிணங்க முன்னர் காணப்பட்ட அமைச்சின் கீழுள்ள ஆதனங்கள் மற்றும் பொறிகள் புதிய அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது இவை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததனால் அச் செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க 2018 சனவரி 01 இல் உள்ளவாறு ACA 6 இல் உள்ள மீதி குறைத்து பதியப்பட்டிருந்தது. |
| (ஆ) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் ரூபா 595,032 ஆக இருந்தும் மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் அது முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் விற்பனைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். | நிலையான சொத்துக்களின் விற்பனைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

### 1.6.5 மிகைச் செலவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கு உட்படலாகாது என்ற போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சேமிப்புக்களை மிகைத்து 05 செலவு விடயங்களுக்காக ரூபா 1,664,470 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் செலவுத் தலைப்பு 199 இன் கீழ் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் செலவுகளை மேற்கொள்வதற்காக போதியளவு கட்டுநிதி கிடைக்காமையின் காரணமாக ரூபா 2.518 மில்லியன் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் ஏற்பட்டிருந்தது. அதற்காக தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாட்டு திணைக்களம் தேவையான மேலதிக நிதி ஏற்பாடுகள் மற்றும் கட்டுநிதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதனை முறையாக நிறைவேற்ற முடியாமையின் காரணமாக உரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2018 ஆம் ஆண்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டின் போதும் அவ்வாறான நிலைமை உருவாகியுள்ளன. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைத்து செலவுகளுக்கு கடப்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிலைமை |

| | | |
|---|---|---|
| | | அத்தியாவசியமான செலவு செய்தல்களின் காரணமாக இடம்பெற்ற செலவு கடப்பாடு என்பதனால் நிதி முகாமைத்துவத்தின் போது தவிர்க்க முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருந்தது. |

### 1.6.6 ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் ஊழியர் பிணை வைப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைப்பு பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசாங்க சேவை பிணைதாரர்கள் சங்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அங்கத்துவத்தினைப் பெற்ற பின்னர் பிணை வைப்பு பதிவேடு பேணப்படும். |

### 1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவு | ஓய்வு பெறுவதற்கு முன்னர் முழுக் கடன் பணமும் மீளச் செலுத்தி முடிவுறுத்தப்பட்டது அல்லது ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் தமது ஓய்வூதியத்தினை பரிமாற்றம் செய்து மீளச் செலுத்தவுள்ள கடன் மீதி இருக்குமாயின் அம் மீதியை தமது பரிமாற்றப்பட்ட ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்வதற்கு | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த அமைச்சில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களில் அதிக அளவானவர்கள் புதிய உத்தியோகத்தர்கள்ளாக இருப்பதனால் அவர்களுக்கு கடன் முற்பணங்கள் வழங்கும் போது வாக்குறுதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஓய்வு பெறுவதற்கு அண்மித்த நிலையில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து வாக்குறுதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரம் வழங்குவதாக எழுதப்பட்ட வாக்குறுதிக்கு உத்தியோகத்தர் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------<br>நிதிப்பிரமாணம் 1646 | வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் குறித்த மாதத்திற்குப் பின்னர் வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் மாதாந்தப் பொழிப்பின் முதல் பிரதியுடன் நாளாந்த ஓட்டக் குறிப்புக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் 15 வாகனங்களுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நாளாந்த ஓட்டக் குறிப்புக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் அந்த நிலைமை தற்பொழுது நாளது வரையாக்கப்பட்டுள்ளது. |
| (iii) | சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை<br>-----------------------------------<br>2006 பெப்ரவரி 21 ஆந் திகதிய CSA/2/3/4 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.2 ஆம் பிரிவு | ஒரு அமைச்சருக்கு ஒரு வருடத்தில் பயணம் செய்யக்கூடிய வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கையானது 05 உத்தியோகபூர்வ பயணங்களும் 05 தனிப்பட்ட பயணங்களுமாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவையால் 2018 ஆம் ஆண்டில் 12 வெளிநாட்டு உத்தியோக பயணங்கள் மேற்கொண்டிருந்தார். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சரின் ஒரு ஆண்டிற்குள் பயணம் செய்யக்கூடிய வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை உள்ளடக்கி வெளிநாட்டுப் பயணங்களுக்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அத்தரவுகள் தொடர்பாக கவனம் செலுத்தாது சனாதிபதி செயலகத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை<br>------------------------------- | | | |
| 2018 நவம்பர் 28 ஆந் திகதிய 276/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி | திறைசேரிக்கு அறிக்கையிடப்படாத ஏதாவது பொறுப்புக்கள் 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டில் அவ்வாறு அறிக்கையிடப்படாத ரூபா 2,885,673 பெறுமதியான பொறுப்புக்கள் 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும், 2018 திறைசேரி கணனி அச்சுப் பிரதியின் மூலம் காட்டப்பட்டதானது 2018திசெம்பர் 31 இல் நிதி ஏற்பாடு காணப்பட்டிருந்தும் கட்டு நிதி கிடைக்காததன் காரணமாக ஏற்பட்ட கடப்பாடுகளும் பொறுப்புக்களுமாக இருந்ததனால் அவ்வாறான சுற்றறிக்கைகளுக்கான மீறல்கள் இடம் பெற்றிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு
-------------------------------

### 2.1 செலவு முகாமைத்துவம்
-----------------------------------------

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 03 மீண்டுவரும் செலவு விடயங்களின் ரூபா 1.2 மில்லியன் மொத்த தொகை மற்றும் ரூபா 200,000 தொகையான ஒரு மூலதன செலவு விடயத்தின் நிதி ஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | பிரதி அமைச்சர் அலுவலகத்திற்காக பத்தரமுல்லை பிரதேசத்தில் அலுவலக இடவசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் சுஹுருபாய கட்டிடத்திலேயே ஸ்தாபிக்க வேண்டியிருந்த காரணத்தால். |
| (ஆ) அவ்வாறே 08 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 07 மூலதன செலவு விடயங்களின் ரூபா 991.27 மில்லியன் மொத்த தொகையான தேறிய நிதி ஏற்பாடுகளின் சேமிப்பு 10 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | - மேற்படி - | நீர், மின்சாரம், தபால் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் கட்டிடங்களினதும் வாகனங்களினதும் பராமரிப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் என்பவற்றிற்காக போதியளவு வேண்டுதல் கிடைத்திருக்காமையின் அடிப்படையில் |
| (இ) 05 செலவு விடயங்களின் ரூபா | நிதிப்பிரமாணம் 50 | அபிவிருத்திச் செயற்திட்டங்களை |

| | | |
|---|---|---|
| 2.45 மில்லியன் மொத்த தொகையான குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட மேலதிக நிதி முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருந்ததால் மற்றும் நிதி தேவைப்பாடு தொடர்பாக முறையான ஆய்வுடன் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். | அமுல்படுத்துதல் மற்றும் அமைச்சின் வழக்கமான நிருவாகத்திற்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்குமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளைச் செலவு செய்தல் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதன் காரணமாக. |

## 2.2 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்து வைத்தல்களும

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 371(இ) இல் குறிப்பிட்டவாறு உப கட்டுநிதிகளை வழங்குதல் ஏதாவது பதவிநிலைத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டியபோதிலும் பதவி நிலையற்ற தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு 18 சந்தர்ப்பங்களின் போது ரூபா 209,514 மொத்த தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 371(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நான்கு பதவிநிலை உத்தியோகத்தர்கள் மாத்திரம் உள்ளதுடன் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றலை முறையாகப் பேணுவதற்காக முன்னுரிமைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களுக்கும் முற்பணங்கள் வழங்கப்பட்டன. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதிகள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் உத்தியோகத்தர்களால் 62 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2.54 மில்லியன் செயல்நிமித்த உப கட்டுநிதிகள் மேற்கூறிய காலப்பகுதியை மிகைத்து 11 நாட்களிலிருந்து 282 நாட்கள் வரையான வீச்சுடைய காலப்பகுதியில் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இந்த அமைச்சின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் வெளிக்களப் பரிசேதனைக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உப கட்டுநிதியைத் தீர்த்துவைக்கும் போது நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் தாதமதங்கள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஆலோசனைகளின் பிரகாரம் உப கட்டுநிதிகளைத் தீர்த்து வைப்பதற்காக திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் சம்பந்தமாக செம்மையாக்கல் செய்யும் போதான குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும் அத்திட்டத்தில் பின்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (அ) அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியாக சேவையின் உள்ள பதவியணியினரும் தொடர்பான விபரம் | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அங்கீகரித்த பதவியிணயினர் மற்றும் நடைமுறை ஆண்டிற்கான உள்ளபடியான பதவியணியினர் அறிக்கை தயாரிக்கப்பட்டு திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) அமைச்சின் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாடு | - மேற்படி - | இந்த அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதித் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) அமைச்சினால் திட்டமிடப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வருடாந்த பெறுகைத்திட்டம் | - மேற்படி - | வருடாந்த பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டு தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கும் தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றம் வழங்கப்படாதிருந்த செயற்திட்டங்கள்**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| விவசாயப் பாதைகளுக்கு குறுக்காக உள்ள பாலங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக (தமன) ரூபா 38 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு உரிய நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தும் ரூபா 37.6 மில்லியன் நிதி ஏற்பாடு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத்திடத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விவசாயப் பாதைகளுக்கு குறுக்காக உள்ள பாலங்களை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்திற்கு ரூபா 38 மில்லியன் 2018 நவம்பர் மாதம் வழங்கப்பட்டிருந்தும் இச் செயற்திட்டம் மத்திய அளவிலான செயற்திட்டம் என்பதனால் 3 மாதங்களிலிருந்து 6 மாதங்கள் வரையான கால வீச்சில் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எடுப்பதனால் மற்றும் ஆண்டின் இறுதியில் கட்டுநிதியைப் பெற்றுக்கொள்வதற்கு காணப்படுகின்ற சிக்கலான நிலைமையை கருத்திற் கொண்டு அச் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளல் முடியாதிருந்தது. |

**3.3 விவசாய பிரிவை நவீன மயப்படுத்தும் செயற்திட்டம்**

அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற விவசாயத்தை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட கட்டுப்பாட்டுக்குழு அங்கத்தவர்களுக்கு படிகள் கொடுப்பனவு | | |
| | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் Steering Committee இன் அங்கத்தவர்கள் அக் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதற்காக செலுத்த வேண்டிய படிகள் ஒரு சந்தர்ப்பத்திற்கு ரூபா 3,000 ஆக குறிப்பிட்டிருந்தும் இச் செயற்திட்டத்தின் பணிப்பாளர் சபையின் தலைவர் பதவிக்காக ஒரு கூட்டத்திற்கு ரூபா 15,000 தொகையும் பணிப்பாளர் சபை அங்கத்தவரின் ஒரு கூட்டத்திற்கு ரூபா 10,000 தொகையுமாக படிகள் | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இதற்காக முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டு ஞாபகமூட்டல்கள் இடம்பெற்றிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. | | முறையான பதில் கிடைத்திருக்கவில்லை. இதற்காக அப்போதைய ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு செயலாரினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு இடம்பெற்றிருந்தது. அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | G.S.1 மென்பொருள் தொகுதியை கொள்வனவு செய்தல்<br>-----------------------------------------------------------------------------<br>செயற்திட்ட நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கும் தரவு GSI களஞ்சியமாக பேணுவதற்கும் ரூபா 4.25 மில்லியன் பணத்திற்கு 2017 திசெம்பர் 22 ஆந் திகதி கொள்வனவு செய்த G.S1 மென்பொருள் தொகுதி 2019 சனவரி 08 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. இத் தொகுதியை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாயப் பிரிவினை நவீன மயப்படுத்தும் செயற்திட்டத்தின் 05 உத்தியோகத்தர்கள் தொகுதியை கொள்வனவு செய்த நிறுவனத்தின் மூலம் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். எனினும் இத் தொகுதியினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்காக செயற்திட்டத்தின் மேல்மட்ட பயிற்சிகளைப் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | செலவு செய்யப்பட்ட பணத்திலிருந்து உச்ச அளவு வினைதிறனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆலோசகர் ஒருவரைச் சேர்ந்துக் கொள்வதற்கு 02 சந்தர்ப்பங்களில் நடவடிக்கை டுக்கப்பட்டிருந்தும் செலுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட மாதாந்தப் படி ரூபா 150,000 ஆக இருந்ததனால் பொருத்தமான ஒருவரைக் கண்டுபிடிப்பதற்கு சிக்கலாக இருந்தது. தற்பொழுது இதற்காக ஒரு ஆலோசர் முன்வந்துள்ளதுடன் அண்மைக் காலத்தில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | விவசாயப் பிரிவை நவீனமயப்படுத்தும் கால எல்லை 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டுவரையான 05 ஆண்டுகளாக இருந்ததுடன் இதற்கிணங்க 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செயற்திட்டத்தின் கிரய மதிப்பீடு முறையே ரூபா 1459 மில்லியன் மற்றும் ரூபா 1824 மில்லியனாக இருந்தும் அந்த ஆண்டுகளில் உள்ளபடியான செலவுகள் ரூபா 293 மில்லியன் மற்றும் ரூபா 340 மில்லியன் | திட்டத்திற்கு இணங்க செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட புள்ளிவிபரத் தரவுகள் சரியானதாகும். எவ்வாறாயினும் அனைத்து நிதி ஏற்பாடுகளும் செயற்திட்டத்தின் கூறு |

| | |
|---|---|
| மாத்திரமாகும். அவ்வாறே இச் செலவுகளுக்கு வழக்கமாக மூலதன செம்மையாக்கல்கள் மானியங்களிலிருந்து கிடைக்கின்ற முதலீட்டாளர்களால் செலவு செய்யப்பட வேண்டிய ஐக்கிய அமெரிக்க டொலர் 44.10 மில்லியன் அளவினை செலவு செய்தமை தொடர்பான விபரம் செயற்திட்டத்தில் இல்லாதிருந்ததுடன் அப்பணத்தை செலவு செய்த முறைமை சம்பந்தமாக விபரம் செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் 01 மற்றும் 02 இற்காக வழங்கப்பட்டுள்ளது. |

**3.4 பெறுகைகள்**

---------------------

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8(ஆ) பந்தியின் பிரகாரம் விடயம் தொடர்பாக நிபுணத்துவமுள்ள ஒருவர் / நிபுணத்துவமுள்ளவர்களை மற்றும் பெறுகை நடைமுறைகள் தொடர்பான போதிய அறிவுள்ள ஆகக்குறைந்தது ஒரு அங்கத்தவரை தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு உள்ளடக்கி இருத்தல் வேண்டும். எனினும் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற INCO (The Institution of Incorporated Engineers) கண்காட்சிக்காக மற்றும் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கண்காட்சிகளுக்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளும் குறிக்கோளுடன் ஒரு கண்காட்சிக் கூடத்தை தயாரிப்பதற்கான பெறுகைகளின் போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான செயல்திட்டங்களுக்காக விடயஅறிவுள்ள உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு ஆலாசனை வழங்கப்பட்டுள்ளது. |

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| அமைச்சின் அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக பத்தரமுல்லை சுஹுருபாய கட்டிடத்தின் 16 ஆம் மாடி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் ஏற்றுமதி விவசாயப் பிரிவு மற்றும் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகள் பிரிவினைப் பேணுவதற்காக உலக வர்த்தக நிலையத்தின் 18 ஆவது மாடியில் 4850 சதுர அடி அளவான இடம் வாடகை அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரை பெற்றுக்கொள்ளப்படடிருந்தது. அதற்கிணங்க முறையே 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக வாடகை மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகளுக்காக முறையே ரூபா 18,941,635 மற்றும் ரூபா 21,539,290 தொகைகள் செலவு செய்யப்பட்டிருந்தும் 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை 03 உள்நாட்டு கருத்தரங்குகள் மற்றும் 03 வெளிநாட்டு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டிருந்தன. அவ்வாறே 2018 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாத்தின் பின்னர் இந்த வளவு எதுவித நடவடிக்கைகளுக்காகவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விவசாய ஏற்றுமதிப் பிரிவு மாத்திரம் செயற்பட்டிருந்தும் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியின் பின்னர் அப்பிரிவின் நடவடிக்கைகள் கலைக்கப்பட்டதனால் இடம்பெற்ற செலவுகள் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் நிதியை உச்ச அளவு செயலாற்றலுடன் சிக்கனமாக விளைதிறனுடன் செலவு செய்யப்படுதல் வேண்டும். | இந்த அமைச்சின் கீழ் செயற்படுகின்ற ஏற்றுமதி விவசாய மற்றும் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகள் பிரிவை சுஹுருபாய கட்டிடத்தில் செயற்படுத்துவதற்காக போதியளவு இட வசதிகள் இல்லாததனால் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தும் இக் கட்டிடம் 2017 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக 2017/2018 இற்காகவும் 2018/2019 ஏப்ரல் 30 வரையும் உடன்படிக்கை செய்துகொளப்பட்டிருந்தது. அப்பிரிவிற்காக இலங்கை நிருவாக சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அ னைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அமைச்சுக்கள் திருத்தங்களின் காரணமாக அச்செயற்பாடு செத்சிரிபாய II ஆம் கட்டத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. 2009 ஏப்ரல் 30 ஆந் திகதியிலிருந்து அப் பிரிவின் நடவடிக்கைகளை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2015-2030 காலத்திற்குள் அடைந்து கொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களையும் இலக்குகளையும் இனங்கண்டு அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் கட்டுப்பட்டு இருந்தும் அமைச்சினால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களும் இலக்குகளும் உறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அக்குறிக்கோள்களையும் இலக்குகளையும் அளவீடு செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான குறிகாட்டிகளை இனங்காணல், அடிப்படைத் தரவுகளை இனங்காணல், வருடாந்த இலக்குகளை இனங்காணல் அவற்றின் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தல் ஆகிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது.<br>அதற்கிணங்க 2016 – 2030 காலப்பகுதியின் போது இலங்கையின் ஏற்றுமதிப் பயிர்களை பல்வகைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி விவசாய கைத்தொழில் பிரிவில் ஈடுபட்டுள்ள நபர்களின் மற்றும் நிறுவனங்களின் ஏற்றுமதிப் பயிர் மற்றும் வாசனைத் திரவிய பிரிவின் வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் தேசிய வருமானத்தில் ஏற்றுமதி விவசாயத்திற்குரிய இடத்தை 30 சதவீதத்தால் மேம்படுத்துவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தற்போழுது அமுல்படுத்தப்படுகின்றது. |

## 5. நல்லாட்சி

### 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/2009(1)(i) ஆம் இலக்க கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு 01 காலாண்டு வீதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 04 தடவை நடாத்தப்பட வேண்டியபோதிலும் மீளாய்வாண்டின் போது இரண்டு கட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன. | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆரம்பக் கைத்தொழில் அமைச்சிற்கு ஒரு பிரதான உள்ளகக்கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் அடிக்கடி இடம்பெற்ற அமைச்சு திருத்தங்களின் காரணமாக உருவாகிய நிருவாகச் சிக்கலுடனான நிலைமையின் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் விவசாய அமைச்சிலேயே நடாத்தப்பட்டன. அதற்காக பிரதான கணக்காளரும் ஏனைய உத்தியோகத்தர்களும் பங்குபற்றியுள்ளனர். |

## 6. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அமைச்சிற்கு அமைச்சின் சிரேஷ்ட மட்டம், மூன்றாம் மட்ம் இரண்டாம் மட்டம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் அவ் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது மேலதிக பதவிகளாயிருந்தால் பதவியணியைத் திருத்தம் செய்தல் வேண்டும். | இதற்காக அரசாங்க நிருவாக அமைச்சிற்கு தெரியப்படுத்தி கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் 2018 ஆம் ஆண்டில் 06 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 10 முகாமைத்துவ உதவியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட மட்டத்திற்காக |

உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.